# குமரன் 55



15.4.1979


வழிபாடு
கலையும் சமுதாயமும் - 6
கவிஞர் கண்ணதாசன் ஒரு மதிப்பீடு-2
யார் இந்த பாலச்சந்தர்?
கல்வி வழிபாடு
நினைவுகூர்கின்றோம்
கேள்வி ? பதில் !


விலை : 60 சதம்

குமரன் குறிப்புகள்

# கல்வி வழிபாடு

கோவிலுக்குச் சென்று கற்பனைத் தெய்வங்களை வழிபடுவது தான் இன்றைய சமுதாய அமைப்பிலுள்ள பெரிய மூடநம்பிக்கை என நாஸ்திகவாதிகள் கூறலாம். கூர்ந்து பார்ப்பின் மதத்திலும் பார்க்க மோசமான நிலையில் வேறு பல புதிய மூடநம்பிக்கைகள் இன்று தோன்றியிருப்பதைக் காணலாம். அவற்றில் முதன்மையானது கல்வி வழிபாடு ஆகும்.

மதங்களை, தெய்வங்களை தமது வாழ்வின் விடிவிற்காக வழி படுவதிலும் பார்க்க பாடசாலைகளை கல்லூரிகளை, பல்கலைக்கழகங் களை வழிபடுபவர்கள் எம் நாட்டில் அதிகரித்து வருகிறார்கள். இன்று தெய்வங்களை வழிபடுவதிலும் பார்க்க அதிக நேரத்தையும் சிந்தனையையும் கல்வியை வழிபடுவதற்கு செலவழிக்கின்றனர்.

இது தவிர கோவில் அர்ச்சனைக்காகவும் பூசைகளுக்காகவும் செலவு செய்யும் பணத்திலும் பார்க்க பல மடங்கு பணத்தை கல் விக்கு அர்ச்சனை செய்வதில் செலவிடுகிறார்கள். பெரும்பாலான நடுத் தர வகுப்புக் குடும்பத்தவர் கல்வி மூலம் தம் வாழ்விற்கு விடிவு பெறலாம் என்ற நம்பிக்கையுடன், தமது சிறு உடைமைகளை யெல்லாம் விற்றுக்கூட கல்வித் தெய்வத்திற்கு அர்ச்சனை செய் கின்றனர். அவர்கள் பூசிக்கும் புத்தகக் கல்வி பல லட்சம் கல்வி கற்ற மாணவர்களையே வேலையற்றவர்களாக தெருவில் தள்ளிய தைக் கண்ட போதும் வழிபாடு நின்று விடவில்லை. இதுவே பெரிய தோர் அறியாமையாகும்.

இப்புத்தகக் கல்வி வழிபாட்டால் பணத்தை மட்டும் பெரும் பாலோர் இழந்து விடவில்லை. சிறு வயது தொடக்கம் இளம் வயது வரை தமது பிள்ளைகளின் சுதந்திரமான, உடல் நலமான வாழ் வையும் கெடுத்து விடுகிறார்கள். நாள்தோறும் புத்தகக் கல்வியை மனனம் செய்வதும் அடிக்கடி பரீட்சை எழுதுவதிலுமே இளம் வய தினரின் இளமைக்கால வாழ்வு பறிபோய் விடுகிறது. சிறுவர்களுக்கு, இளம் வயதினருக்கு இன்றைய சமுதாய அமைப்புச் செய்யும் பெரிய கொடுமை இதுவென்றே கூற வேண்டும். சர்வதேச குழந்தைகள் ஆண்டை உலகெங்கும் கொண்டாடும் இவ்வேளையிலாவது குழந் தைகளுக்கு இன்றைய சமூக அமைப்பு விளைவிக்கும் மூளைக் கொடு மையை (MENTAL CRUELTY) நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். இக்கொடுமை, சுதந்திரமாக பாலர்கள் துள்ளித் திரியும் வயதான 3—4 வயதிலேயே ஆரம்பித்து விடுகிறது. சில நாள் ஆர்வமாக சிறு வர் பாடசாலைக்குச் செல்லும் பிள்ளை பின்னர் அதை எதிர்க்கிறான்-

அப்பிள்ளையை அடித்து, பயமுறுத்தி, சிறைச்சாலையான பாடசாலையையே பழக்கி விடுகிறார்கள். அங்கு சிறை வார்டன்மார் போல ஆசிரியர்கள் பிள்ளைகளுக்கு மேலும் மூளைக்கொடுமையை செய்வது மட்டுமல்ல., உடலுக்கும் தண்டனை தருகின்றனர். ஒழுக்கம், ஒழுங்கு முறைகள் என்று கூறி சுதந்திரத்தையும் விளையாட்டையும் விரும்பும் பிள்ளைகளை அடித்து, 'அறம் செய விரும்பு ஆறுவது சினம்' ...... ஆகிய இன்றைய சமுதாய அறநெறிகளை அவர்கள் மூளையில் திணித்து, இன்றைய சமுதாய அமைப்பை அப்படியே ஏற்றுக் கொள்ளும் அடிமைகளாக்கி விடுகிறார்கள்.

பாடசாலைகளை எதிர்க்கும் பிள்ளை பின்னர் சிறிது, சிறிதாக அமைதியடைந்து கல்வியை வழமையாக்கிக் கொள்கிறான். ஆயினும் இடையிடை அவன் பாடசாலையை எதிர்ப்பதையும் வீட்டில் புரட்சி செய்வதையும் சாதாரணமாகக் காணலாம்.

பாடசாலையில் கடைசிமணியடித்ததும் அங்கு எழும் மகிழ்ச்சி ஆரவாரத்தையும் பிள்ளைகளெல்லாம் ஓடி வந்து பாடசாலை கேற்றைத் தாண்டியதும் தெருவில் நின்று ஒருதடவை பாடசாலையைப் பார்ப்பதையும் சாதாரணமாக காணலாம். சிறைக் கதவைத் தாண்டிய கைதியின் மகிழ்வை அவர்களின் முகத்தில் அவ்வேளை காணலாம்.

வீட்டுக்கும் பாடசாலைக்கும் இடையில், பெற்றாருக்கும் ஆசிரியர்களுக்குமிடையில் எம் நாட்டுச் சிறுர்கள் பந்தாடப்படுவது போன்ற கொடுமையையும் துன்பத்தையும் இன்றைய அரசியலார் ஆராய்ந்து பார்ப்பதில்லை. ஏன்?

சாதி, மதம், கல்வி, அரசியல், கலை, இலக்கியம் யாவும் மேல் மட்ட அமைப்பைச் சார்ந்தவையே. இவை யாவும் இன்றைய அடிப்படை அமைப்புக்கு சேவை செய்பவையேயாகும். இன்றைய ஆளும் வர்க்கமான தரகு முதலாளிகளுக்கு சேவை செய்வதாகவே இம் மேல் மட்ட அமைப்புகள் அமைக்கப்படுகின்றன. அவர்களுக்குச் சேவை செய்வதற்கேற்ற கல்வி முறை மிக அத்தியாவசியமாகும். தரகு முதலாளிகளின் அரசு யந்திரத்தை இயக்கவும் வாணிப நிலையங்களைப் பார்க்கவும் கல்வி கற்ற ஏராளமான கூலி அடிமைகள் தேவைப்படுகின்றனர். அத்தேவையைப் பூரணப்படுத்த கல்வி திசை திருப்பப்படுகிறது.

கல்வி முறை கூலி அடிமைச் சந்தையை தேவைக்கு மேலாக நிரப்பி விடுவதும், தரகு முதலாளிகளுக்கு குறைந்த கூலியில், கூலி அடிமைகளின் உழைப்பைவாங்குதை எளிதாக்கிறது. (முதலாளித்துவ

உற்பத்தி முறை திட்டமில்லாது இருப்பதனுலேயே கூலி அடிமைச் சந்தையில் நிற்பவர்களே பின்னர் ஆளும் வர்க்கத்திற்கு தலையிடியாக, அவ்வர்க்கத்தை அழிப்பதற்காக எழுகின்றனர். தடியையும் கல்வியையும் ஆசிரியர் கையில் கொடுத்து பாலர்களை அடக்கி ஒடுக்கும் ஆளும் வர்க்கம் பின்னர் பொலிஸ், இராணுவத்தினர் கையில் துப்பாக்கியைக் கொடுத்து அடக்கி ஒடுக்க முயல்வதைக் காணலாம்)

இன்றைய சமுதாய அமைப்பாலும் கல்வி முறையாலும் ஏற்படும் மற்றோர் முரண்பாடும் உள்ளது;

தொழிலாளி, விவசாயிக் குடும்பங்களிலிருந்து பல துன்பங்களிடை கல்வி முடித்து, அரசின் அதிகாரிகளாக, காவலர்களாக ஒரு பகுதியினர் செல்கின்றனர். காலப்போக்கில் இவர்களே தாம் பிறந்து வளர்ந்து வந்த தொழிலாளி, விவசாயிகளுக்கு எதிராக செயல்படுவதைக் காணலாம். பொலிஸார், இராணுவத்தினர் மட்டுமல்ல அரசு யந்திரத்தை இயக்கும் அதிகாரிகள், ஊழியர்களே இவ்வாறு நடந்து கொள்கின்றனர். இதற்கு ஒரு காரணம் பாலர் வகுப்பிலிருந்து பல்கலைக்கழகம்வரை தரப்படும் கல்வி முறையேயாகும். பல்கலைக்கழகமே இன்றையே பெரிய ஆலயமாக உள்ளதைக் காணலாம். அங்கு நுழைவதே பெரிய போராட்டமாக வந்துள்ளது' அங்கேயே அரசு யந்திரத்தை இயக்கும் கோட்பாடுகளும் முறைகளும் பயிற்றுவிக்கப்படுகின்றன. அக்கல்வி பெற்றவர்களே அதிகாரிகளாக கடமை புரிய தகுதியுள்ளவர்கள் என ஆளும் வர்க்கம் கருதுகிறது. அக்கல்வி பெற்றவர்கள் தாம் வாழ்ந்து வந்த நசிந்த வர்க்கத்தை மறந்து, ஆளும் வர்க்கத்தவருக்கு சேவை செய்வதிலேயே கண்ணும் கருத்துமாக இருப்பதைக் காணலாம். ஆளும் வர்க்கமும் அவர்களுக்கு வேண்டிய சலுகைகளை தந்து தம் வர்க்கத்தவருக்கு மட்டும் சேவை செய்பவர்களாக ஆக்கி விடுகின்றனர்.

'வழிபாடு' என்ற சிறு கதை ஒரு குட்டி பூர்ஷ்வா வர்க்க குடும்பத்தில் அதிகாலையில் நடைபெறும் சம்பவங்களைக் கூறுகிறது. இது அங்கு மட்டுமல்ல எல்லாக் குடும்பங்களிலும் காலையில் நடைபெறும் நிகழ்ச்சியாகும். இன்றைய கல்வியால் பாடசாலைக்கும் வீட்டுக்குமிடையில் பந்தாடப்படும் பாலர்களிடை ஏற்படும் முரண்பாட்டை இக்கதை தொட்டுக் காட்டுகிறது.

நோயின் போது வெறுப்பான கசாயத்தை விழுங்குவதுபோல் இன்றைய கல்வியை வெறுப்போடு மனனம் செய்து மூளையில் திணிக்க மாணவர் முயல்கின்றனர். பரீட்சை முடிந்ததும் படித்த குறிப்புகள், புத்தகங்களை எரித்து விடுவேன் என்று 'வழி பாடு'

கதையில் மல்லிகா கூறுகிறாள். கல்வி மேலுள்ள மாணவரின் வெறுப்பை இக்கதையில் காணலாம். படித்தவற்றை பரீட்சை முடிந்ததும் மறந்து விடவே மாணவர் முயலுகின்றனர். அது பயனற்ற கல்வி என்பதை அவர் அறிவர். அது தவிர படித்த காலத்திய மூளைத் துன்பத்தையும் அவர்கள் மறக்க முயல்வது இயல்பே

ஆரம்பக் கல்வியை முற்றாக எதிர்ப்பதென்றல்ல. அது கூட இன்றைய அமைப்பில் பாலர்களுக்கு எத்தனை கசப்பாக அமைந்துள்ளது என்பதையே வலியுறுத்துகிறோம்.

மதக் கோவில்களால் ஏற்படும் சலசலப்பிலும் பார்க்க கல்விக் கூடங்களால் ஏற்படும் சலசலப்பு இன்று வேகமடைந்து வருவதைக் காணலம். இச் சலசலப்பே இன்றைய சமுதாய அமைப்பை உடைத்தெறிய தோன்றும் புரட்சிக்கும் துணை நிற்கும் என்பது உறுதியாகும்.

# சாதி அமைப்பு

விவசாயம், கைப்பணி, சேவைகள், பானைவனைதல், இரும்பை சூடேற்றி அடித்தல், நெய்தல், துணிதுவைத்தல், மரம் ஏறுதல், ஆடுமாடுமேய்த்தல் ஆகிய வேலைகளை தொடர்ந்து செய்து ஓரளவு ஆரம்பத் திறமை பெறுவது வேலைப் பிரிவினையை ஏற்படுத்தியது. மத்தியகால ஐரோப்பாபோல தொழில்களுக்கு வழிகாட்டிகள் இல்லாததாலும் இன்று போல் தொழிகளைக் கற்க பயிற்சி நிலையங்கள் இல்லாததாலும் இளம் பிள்ளைகள் தமது பெற்றோரிடமிருந்தே தொழில்களைக் கற்கநேரிட்டது. சந்தைக்காகவே உற்பத்தி நடைபெற்றது. உற்பத்தி செய்வோர், நுகர்வோர் என்ற சக்கரத்தினூடாகவே சமூக உறவுகள் தனித்துவமாக இணைக்கப்பட்டன. இதனால் குசவன் மகன் குசவனாகவே வாழ்ந்தான். விவசாயி தண்ணீர் எடுப்பதற்கு பானை வனைந்தான், நிலப்பிரபுவின் கூரைக்கு ஓடு செய்தான்.

மாற்ற மடையாத சமூக அமைப்பில் குசவனது நிலை அவ்வாறே ஆனது. பிற தொழில் செய்தோரும் அதே தொழிலையே பரம்பரையாக செய்து வந்தனர்.

அக்கால ஆளும் வர்க்கத்தவர் இவ்வாறான உற்பத்தி, சேவையை அடிப்படையாக வைத்தே சாதி என்ற சித்தாந்தத்தை வைத்து ஏற்றத்தாழ்வு முறையில் சமூகத்தை பிரித்தனர். ஆளும் வர்க்கத்தவருக்கு வேலைப் பிரிவினை முறையில் உற்பத்தி செய்தோரின் சேவையின் இயல்பு, முக்கியத்துவத்தைப் பொறுத்தே அவரவர் சாதியின் தரம் வகுக்கப்பட்டது, இவ்வாறு சாதிகளை தரம் பிரிக்கும் வேளை ஒரு விஷத்தைப் பற்றிமட்டுமே விவாதிக்க அனுமதித்தனர். அது எவருடைய சேவை எசமானுக்கு, நிலப்பிரபுவுக்கு முக்கியமானது என்பதே.—குரு.

# கலையும் சமுதாயமும் - 6

செ. க.

கலை பற்றிய உறுதியான ஒரு கோட்பாட்டை முன் வைத்தவர்களுள் பிரெட்ஸ் (BRECHT 1898-1956) என்ற ஜர்மனிய நாடகாசிரியர் முதன்மையானவர். அவர் ஆக்கிய நாடக மரபுக் கோட்பாடுகளும் மிகவும் முற்போக்கானவை.

ஒரு மார்க்ஸிஸ்டு என்று பல நாடுகள் முன்னர் அவரை ஒதுக்கினர். இன்று முதலாளித்துவ நாட்டினரே அவரது நாடகங்களை ஏற்று அவற்றின் சிறப்புகளை மழுப்பி விட்டனர்; முதலாளித்துவத்தை சார்ந்த பகுத்தறிவாளராக்கி விட்டனர்.

பிரெடஸ் நிலை நாட்டிய முக்கிய கோட்பாடு கலை, இலக்கியத்தில் பார்வையாளரை கலை உணர்வுத் தூரத்தில் (Aesthetic Distance) வைப்பது என்பதாகும். இக்கோட்பாடு பற்றி தமிழ் நாட்டவர் இதுவரை நன்கு அறிந்திராததும், இம்முயற்சியில் ஈடுபடாததும் குறையே.

ஒரு கலை வடிவத்தின் மூலம் மனித அனுபவத் தொகுப்பை பார்வையாளர் பார்க்கும் போது (அல்லது படிக்கும் போது) அவர்கள் வாழ்க்கையை கலைவடிவத்தினூடாக பார்க்கிறோம் என்ற நினைவு பார்வையாளருக்கு ஏற்பட வேண்டும் என்பதே பிரெட்சின் கோட்பாடாகும்.

கலை வடிவங்கள் மிகவும் பலம் வாய்ந்தவை. மனித உணர்வுகளை கவர்ந்து தற்காலிகமாக மயக்கி ஈர்த்துச் செல்ல வல்லவை. இத்தகைய ஏமாற்றத்திற்கு பார்வையாளரை ஈர்த்துச் செல்ல முயல்வது தவறு என்பதே அவரது கருத்தாகும். கலை வடிவங்களைப் படைப்போருக்கே இவ்வெச்சரிக்கையை அவர் இட்டுள்ளார்.

அவரது கோட்பாட்டை நன்கு புரிந்து கொள்வதற்கு சினிமாவையே உதாரணமாக நாம் எடுத்துக் கொள்ளலாம். ஏனெனில் சினிமா மிகவும் பலம் வாய்ந்த ஓர் தொழில் நுட்பம் கொண்ட கலை வடிவமாகும் (Technical Art Form). அது நாடகம், கவிதை, இசை, ஓவியம் ஆகிய பல கலை வடிவங்களை உள்ளடக்கிய ஒரு கலை வடிவமாகும்.

சினிமாவில் காட்சிகள் மிக வேகமாக மாறுவதனால் மனிதனை சிந்திக்கவே விடாது, கதையோடு, காட்சியோடு, இசையோடு, அழகுணர்வோடு அவனது நினைவு பூர்வமான உணர்வுகள் ஈர்த்துச்

செல்லப்பட்டு விடுகின்றன. அதனாலேயே நடைமுறைக்கு ஒவ்வாத சம்பவங்கள், காட்சிகளைக்கூட தற்காலிகமாக, பார்வையாளர்கள் பகுத்தறிவை விட்டு ஏற்றுக் கொண்டு வருகின்றனர். பலப்பல கற்பனை நிகழ்ச்சிகளைப் பற்றிக்கூட பார்வையாளர் எவ்வித வினாவும் எழுப்பத் தவறி விடுகின்றனர். எம்.ஜி.ஆர், பலரை அடித்து விழுத்திய போதும் ஒரு காயமும் ஏற்படாது, உடைகூட கசங்காது இருப்பதைக் காணலாம். கதாநாயகி தூக்கத்தை விட்டு எழும் போதும் திருமண வீட்டிற்குச் செல்வதற்கு உடை உடுத்தி புறப்பட்டிருப்பவர் போல சினிமாவில் காணப்படுவார். கதாநாயகன், கதாநாயகி எப்பொழுதும் அழகானவர்களாகவே இருப்பதைக் காணலாம். 65 வயதான எம்.ஜி.ஆர். 16 வயது நடிகையுடன் காதல் லீலை நடத்துகிறார் என்பதை பார்வையாளர் படம் பார்க்கும்போது மறந்து, கசப்புணர்ச்சியின்றி, ரசிப்பதைக் காணலாம். இது யாவும் சினிமா என்ற தொழில் நுட்ப கலை வடிவத்தின் வலிமையாகும்.

இத்தகைய சூழலில் பார்வையாளர் முற்றாக தம் நிலையை, நினைவை இழந்து திரையில் தோன்றும் பாத்திரங்களுடனும் சம்பவங்களுடனும் ஒன்றி விடுகின்றனர். (பெரும்பாலான பார்வையாளர்கள் சினிமா பார்க்கும்போது தம் ஆசனங்களில் இல்லாது திரையிலே கதாநாயகனாகவோ, கதாநாயகியாகவோ மாறி விடுகின்றனர் என்று உளவியலார் கூறுவர்.)

இச் சூழலில் பார்வையாளர் யதார்த்த வாழ்வைக் காண்பதாக எண்ணி விடுகிறார்கள். அது உண்மையல்லவே; முழுத்தவறே; ஏமாற்றே. கலைஞர்கள் பார்வையாளர்களை இவ்வாறு ஏமாற்றப்படாது என்பதே பிரெட்சின் கோட்பாடாகும். கலைவடிவத்தினூடாக மனித வாழ்க்கையின் அனுபவத் தொகுப்பைப் பார்ப்பதான நினைவு பார்வையாளர்களுக்கு ஏற்பட வேண்டும். அதுவே உண்மையுமாகும்.

இரண்டு மணி நேரம் நாடகத்தில் அல்லது சினிமாவில் சில பாத்திரங்களின் 20-30 வருட வாழ்க்கையின் முக்கிய பகுதிகளையே நாம் நிஜமாகக் காண்கிறோம். அவர்களது வாழ்க்கை முழுவதையும் எவரும் பார்க்க விரும்புவதும் இல்லை. எந்த கலைஞனும் படைப்பதும் இல்லை. அப்பாத்திரங்களின் வாழ்வில் ஏற்பட்ட முக்கிய நிகழ்ச்சிகளான பள்ளி வாழ்வு. காதல், திருமணம், பிள்ளைகள், மரணம், இடையில் அம்மாந்தரிடை ஏற்படும் முரண்பாடுகள் ஆகியவற்றை மட்டுமே சுருக்கமாக கலைஞன் குறியீட்டு முறையாகவோ, உரையாடல், காட்சி வழியாகவோ காட்ட முயல்கிறான். ஆகவே நாம் நாடகம், சினிமா, நாவல் போன்ற பலவகை கலைவடி

வங்களூடாக காண்பது வாழ்க்கையின் சுருக்கம். சாராம்சமே யல்லாது முழு வாழ்வை அல்ல.

நீண்ட வாழ்வின் சுருக்கத்தை தேர்ந்தெடுக்கும் போது ஒவ்வொரு கலைஞனும் தான் சார்ந்திருக்கும் வர்க்க நலனுக்கேற்ப முக்கிய சம்பவங்களை, முரண்பாடுகளை தேர்ந்து கொள்கிறன். முதலாளித்துவக் கலைஞன் ஒரு தொழிலாளியின் காதலை முக்கியமாக கலை வடிவத்தில் தர முயலும் போது புரட்சியை வேண்டும் கலைஞன் அத் தொழிலாளின் வேலை நிறுத்தப் போராட்டத்தை தேர்ந்தெடுக்கலாம்.

பிரெட்ஸ் தன் நாடகங்களை நெறிப்படுத்தும் போது தமது கலை பற்றிய கோட்பாடுகளை கடைப்பிடிக்க தவறவில்லை. நாடகத்தில் காட்சியிகள் மாறி பார்வையாளர் தம்மை மறந்து விடும் வேளைகளில் திடீரென மேடையில் சீன்கள், ஒளி, ஒலி, பின்னணி ஆகியவை இல்லாத முறையில் நாடக பாத்திரங்கள் இயங்குவர். புதிய பார்வையானர் ஏதாவது தவறு நேர்ந்து விட்டதா எனவும் வியப்புறலாம். 'நீங்கள் நாடகத்தைப் பார்க்கிறீர்கள் நிஜ வாழ்க்கையை அல்ல' என்பதை பார்வையாளருக்கு நினைவூட்டுவதற்காகவே. பிரெட்ஸ் இம்முறையை கையாண்டார். பார்வையாளரை கலை உணர்வுத் தூரத்தில் வைத்திருக்க வேண்டும் என்ற கோட்பாட்டை அவர் இவ்வாறு கடைப்பிடித்தார்.

சினிமாவில் பிரெட்ஸின் கோட்பாட்டைக் கைக்கொள்பவர் கொடே (GODET) என்ற பிரபல பிரென்சு டைரக்டராகும். இவர் இன்று உலகிலுள்ள சிறந்த டைரக்டர்களில் ஒருவராகக் கருதப்படுகிறர்.

கொடேயின் சினிமாவைப் பார்த்துக்கொண்டிருக்கும் போது திடீரென இடையிடை வெற்று பிரேம் (Frames)களை திரையில் காணநேரலாம். அல்லது கதை அப்படியே இருக்கத்தக்கதாக டைரக்டரின் அறிவிப்புப்போல சில செய்திகள், புள்ளி விபரங்களை கேட்கலாம். திடீர் பாய்ச்சலாக (JUMPCUTS) சில திடீர் காட்சிகள் தோன்றி மறையலாம். விபசாரிகள் பற்றிய ஒரு கதைப் படத்தில் பாரீஸ் நகரிலுள்ள விபசாரிகள் பற்றிய புள்ளி விபரங்கள் திடீரென ஒலிவரி மூலம் கூறப்படுகின்றன. நீங்கள் சினிமா என்ற கலை வடிவம் மூலம் மனித வாழ்வின் சில பகுதிகளை பார்க்கிறீர்கள் என்ற நினைவை பார்வையாளருக்கு ஏற்படுத்தவே இவ்வாறன அதிர்ச்சி ஏற்படுத்தும். சம்பவங்களை கலைவடிவத்தினிடையே நினைவு பூர்வமாகக்கொண்டு வருகிறர், கொடே.

பழம் அப்பிள் மரத்திலிருந்து விழுவதை ஒவ்வொரு கலைஞனும்

# நினைவு கூர்கின்றோம்!!

— சாருமதி —

மீண்டும் எழுபத்தொன்றை
மீட்டி நான் பார்க்கின்றேன்
மாண்ட நாட்களினை
மறுபடியும் நினைக்கின்றேன் ...

தாண்டவமாடிய
அரசுத் தர்பாரின்
கொடுமைத் தூண்டில்கள்
நெஞ்சைத்
துளைத்துச் செல்கிறது ...

''மனம் பேரியின்'' மரணத்து
கடைசி நினைவுகள்
என்ன வென்று என் நெஞ்சு
எண்ணிப் பார்க்கிறது......
கண்ணீர் சுரக்கிறது

ஏப்ரல் ஐந்தில்
இந்நிலமெங்கும்
எழுதப்பட்ட
இரத்த ஓவியங்கள்
பேருக்கும் புகழுக்கும்
உரியவை அல்ல
அவை —
புரட்சி வேருக்கு
வார்த்த நீர்கள்

பாதை தவறிப்
புறப்பட்ட அப்பயணத்தின்
கோர விபத்துக்கள்
எண்ண முடிகின்ற
எல்லா இதயங்களையும்
கொல்லத்தான் செய்கிறது.

பெயர் சொல்லி
அஞ்சலிப் பிரசுரம் செய்ய
யாரால் முடியும்......?
ஆயிரம் ஆயிரம்
உயிர்களல்லவா நீங்கள்

தோழர்களே!
இம் மண்ணைத் தியாக
செந்நீரால் தோய்ந்தவர்களே!
உங்களின் தியாக
நினைவுச் சின்னங்கள்
இன்று;
எங்கள் இதயங்களில்
நாளை......

மாவோ சொன்ன
மக்கள் போரின்
மாபெரும் வெடிப்புக்களாய்
உங்கள் நினைவுச் சின்னங்கள்
இந்த மண்ணில் மிளிரும்

அந்தக் காலம் வரை
உங்கள் தியாக
நினைவுச் சின்னங்கள்
எங்கள் இதயங்களில்
காவல் காக்கப்படும்.

---

# திரும்பிப்பார்

— வேல் சண்முகராஜா —

சிறைச் கூண்டு போன்ற
சின்னஞ் சிறிய லயத்தறையுள்
பென்னம் பெரிய குடும்பங்களாய்
பேதைகளாய் மாடுகளாய்
நெருக்கி முடக்கிக் கொண்டு
நெடுநாளாய் அடைபட்டு
அடக்கப்பட்டு அல்லலுண்டு
அடிமைகளாய் நடத்தப்பட்டு
உழைப்பால் சுரண்டப்பட்டு
உருக்குலைந்து நிற்குமொரு
மானிட வர்க்கம்
மலைநாட்டில் நிற்குது பார்

# யார் இந்த பாலச்சந்தர்?

— சென்னை செல்வன் —

தமிழ்த் திரைப்பட உலகில் சில ஆண்டுகளாக முதன்மையாக அடிப்படும் பெயர் டைரக்டர் கே. பாலச்சந்தரின் பெயராகும். ஒரு டைரக்டர் பிரபல்யம் ஆவதற்கு பல காரணங்கள் இருக்கலாம். நல்லகதை, சிறந்த பாடல்கள், இனிய இசை, வன்முறை சண்டைகள், செக்ஸ், பிரபல நட்சத்திரங்கள் நடிப்பது, திறமை மிக்க காமராமென், சிறப்பான ரீரிக்கார்டிங்... இவ்வாறு பலவற்றைக் கூறலாம். ஆயினும் இவற்றிற்கு மேலாக தமிழ் நாட்டிலும் சரி, இந்தியாவிலும் சரி ஒரு டைரக்டர் பிரபல்யமாவது ஆயின் அது ஒரு காரணத்தாலேயாகும்:

படம் நல்லாய் ஓடவேண்டும். நகரங்களில் 100 நாட்களுக்குக் குறையாது ஓடவேண்டும். உடனே அப்படத்தின் டைரக்டர் மட்டுமென்ன அப் படத்தைச் சார்ந்த அனைவருமே பிரபல்யமாகி விடுவர்; ஸ்டார் என்ற மதிப்புப் பெற்றுவிடுவர்.

இவ்வாறு பிரபல்யமடைந்த டைரக்டர்களில் அரங்கேற்றம் மூலம் பிரபல்யம் அடைந்த கே. பாலச்சந்தரை மட்டும் இங்கே தனிமையாக எடுத்துக்கொண்டதற்குபல காரணங்களுண்டு. புதுமையாக படம் எடுப்பவர், புதிய நடிகைகளை உருவாக்குபவர், அதிக கச்சா பிலிமை பயன்படுத்துப்வர் என்ற சிறப்பெல்லாம் அவருக்குண்டு. இவற்றில் ஓரளவு உண்மை இல்லாமலில்லை.

தமிழ் படங்களில் ஏதாவது புதுமையை புகுத்தவேண்டுமென்ற ஆவலும், துணிச்சலும் உள்ளவர் பாலச்சந்தர் என்பதை எவரும் மறுக்கமுடியாது. அவரிடம் செல்லும் தயாரிப்பாளர்களுக்கு செலவிடும் பணத்தொகை குறைவாகும். பாலச்சந்தரின் பெயருக்காக படம் நகரங்களில் நிட்சயமாக ஓடும் என்ற நம்பிக்கை தயாரிப்பாளர்களுக்கு உண்டு. ஆகவே பாலச்சந்தருக்கு போதிய சுதந்திரம் கிடைக்கிறது. அவர் விரும்பிய பரீட்சார்த்த படங்களை தயாரிக்க வாய்ப்பு ஏற்படுகிறது. நடிக, நடிகையர்களுக்குகொடுக்க வேண்டிய தொகையையும் அவரே தீர்மானித்து விடுகிறுர். எல்லா வழியாலும் தயாரிப்பாளருக்கு சேமிப்பாகக்கிடைக்கக் கூடிய தொகை முழுவதையும் அவரே தட்டிக்கொண்டும் விடுகிறுர். கதையமைப்பு, டைரக்சனுக்காக இரண்டு லட்சம் ரூபாவரை இன்று இந்தியாவில் பெறும் டைரக்டர் இவர் ஒருவரே என்று சாதாரணமாகக் கூறிக்கொள்கின்றனர்.

பாலச்சந்தரின் சிறப்பு, வளர்ச்சியாவும் உருவம் பற்றியதேயா கும். அவர் ஒவ்வொரு சிறு காட்சி (Shot)யையும் திட்டமிட்டே செய் வது சிறப்புக்கு ஒரு காரணமாகும். மேல்நாட்டில் சினிமா படங்களில் வரும் சிறப்பான அம்சங்களை தமிழ் படங்களில் நன்கு பயன்படுத்து வதில் கைதேர்ந்தவர் இவரேயாகும். வன்முறை சண்டைகளை தமிழ் படங்களின் வெற்றிக்காக புகுத்தாதவரும் இவரேயாகும்.

புதிய நடிக, நடிகையர்களை உருவாக்குபவர் பாலசந்தர் என்ற கருத்து தவறானதாகும். மலையாளம், கன்னடம், தெலுங்குப் படங் களில் பலகாலம் ஜொலிக்கமுடியாது சாதாரண பாத்திரங்களில் நடித்தவர்களையே இவர் தேர்ந்தெடுகிறார். இவரது படத்தோடு அவர்கள் பிரபல்யம் அடைகின்றனர். அவ்வளவே. உதாரணமாக "உணர்ச்சிகள்" என்ற மலையாள, தமிழ் படத்தை திரையிட முன் பார்த்த பின்னரே கமலஹாசன், ஸ்ரீ வித்தியா ஆகியோரை "அவள் ஒரு தொடர்கதை, அபூர்வராகங்கள்" ஆகிய படங்களில். நடிக்கச் செய்தார். சுஜாதா "அவள் ஒரு தொடர்கதை"யில் நடிக்கு முன் பல மலையாளப் படங்களில் நடித்தவர், சோபாவை பாலுமகேந்திரா கன்னட 'கோகிலா'வில் கதாநாயகியாக நடிக்கவைத்த பின்னரே 'நிழல் நிஜமாகிறது' படத்தில் நடிக்க வைத்தார். இவ்வாறே மற் றும் பலரும் ஆகும்.

பாலச்சந்தருக்கு நல்ல காமராமென் கிடைத்ததும் அவரது வெற்றிக்கு ஒரு காரணமாகும்.

உருவ அமைப்பில் பாலச்சந்தரின் பெரிய குறைபாடு சினிமா என்ற சாதனத்தை அவர் முழுமையாக புரிந்துகொள்ளாததாகும், அவர் நாடகமேடையிலிருந்து சினிமாவிற்கு வந்தவரே. அதனால் நாடக மரபுகளை அவரால் முற்றாக மறந்துவிடமுடியவில்லை. சினிமா என்பது கூடிய அளவு ஒரு பார்வை (VISUAL) சாதனமாகும், நாட கம் கூடியளவு கேள்வி செவி (AUDIAL) சாதனமாகும். அவரது சினி மாப் படங்களில் நாடக மேடைபோன்ற அதிக வசனமும், நடிக, நடிகையர் உரத்துக் கத்துவதும், நடிக, நடிகையர் நாடகமேடையில் உலவுவதுபோல அசைவதும் நாடக மரபுகளாகும். பாலச்சந்தரின் படங்களில் வீட்டின் கூரையையே காணமுடியாது என்று கூறுவர். ஏனெனில் நினைவு பூர்வமாக அவரது சிந்தனையாவும் நாடகமேடையை அசைபோடுவதாகும். இதுதவிர எதிர்பாராத விதமாக பாத்திரங் கள் சந்திப்பது, கதையில் திடீர் திருப்பங்கள் ஏற்படுவது 'மெலோ டிராமா' வகையில் கதையை அமைப்பது யாவும் நாடக மரபேயா கும். உதாரணமாக 'அவர்கள்' என்ற படத்தில் மூன்று காதலர் களும் ஒரே வேளையில் ஒரே இடத்தில் சந்தித்து தம் காதலி நோயுற்றபோது பணிவிடை செய்கின்றனர். இந்தச் சந்தர்ப்பத்தை ஏற்படுத்துவதற்காகவே கதை பின்னப்பட்டது நன்கு தெரிகிறது.

பிற மொழிகளில் வெற்றி பெற்ற கதைகளை கையாள்வதும் அவரது வெற்றிக்கு மற்றோர் காரணமாகும். மூன்று முடிச்சுகள், (தெலுங்கில் ஓர் சீதாகதா) நிழல் நிஜமாகிறது (மலையாளம்), அபூர்வராகங்கள் (40 CARETS), அவள் ஒரு தொடர்கதை (வங்காள டைரக்டர் கட்டாக்கின் புகாருக்குள் நடசத்திரம்) இவ்வாறு பலவற்றைக் கூறலாம். இதில் வேடிக்கை என்னவெனில் திருட்டு என்பதை சஞ்சிகைகளில் மறைப்பதாகும், சிறப்பான மேல்நாட்டுப் படங்களை ஒழுங்காகப் பார்த்து வருபவர்கள் அவர் அப்படங்களிலுள்ள சிறப்பான அம்சங்களை திருடியதை எளிதில் அறிந்துகொள்வர். உதாரணமாக 'அவள் ஒரு தொடர்கதை'யில் கதாநாயகியின் தங்கை அறையில் பாலுறவு கொள்வதையும் கதாநாயகி பக்கத்து அறையில் தூங்கமுடியாது தவிப்பதையும் காட்டுவதற்கு கட்டில் ஸ்பிறிங் அசைவு ஒலியை மட்டும் எழுப்பி கதாநாயகியின் வெறுப்பு உணர்ச்சியை பாலச்சந்தர் காட்டி வெற்றி பெறுகிறார். ஸ்பிறிங் ஒலி மூலம் மட்டும் பாலுறவை காட்டுவது ஒரு பிரபல செக்கோசிலவகிய படத்தில் ஏற்கெனவே வந்துள்ள காட்சியாகும்,

பாலச்சந்தரின் படங்கள் புதுமைபோல தோன்றிய போதும் யாவும் ஒரு வாய்பாடு (Formula) முறையிலேயே அமைந்திருப்பதை காணலாம்.

அவரது படங்கள் யாவும் முற்போக்கானவை போல காணப்பட்டபோதிலும் அவை படுபிற்போக்கான உட்பொருளைக்கொண்டிருப்பதைக் கவனிக்கலாம். உதாரணமாக அரங்கேற்றத்தை எடுத்துக்கொள்வோம்.

குடும்பத்தின் வறுமையைத் தீர்க்க ஒரு பெண் விபசாரத்தைத் தொழிலாகக்கொள்கிறாள். அதைச்சரி எனவும் நீதிப்படுத்துகிறார். விபசாரம் தவறான தொழில் என்பதை அவர் அழுத்தந்திருத்தமாக எங்கும் கூறவில்லை குடும்பத்தவர் அறிந்து, அவளது உழைப்பில் வாழ்ந்துகொண்டே அவளை எதிர்க்கும் முரண்பாட்டை மட்டுமே காட்டுகிறார். பார்வையாளர் யாவரும் கதாநாயகியின் மேல் பரிதாபப்படுவதாகவே சினிமா உள்ளது; கதாநாயகியை விபசாரத்திற்காக பார்வையாளர் எவரும் வெறுக்கவில்லை. காதலித்தவனை திருமணம் செய்து அவள் வாழ்வதையே ரசிகர்கள் விரும்பினர். அத்தகைய முற்போக்காக கதையை முடிக்க பாலச்சந்தர் தயாராக இல்லை. பார்ப்பனீய ஒழுக்க வரம்புகளை மீறும் துணிச்சல் அவருக்கு இல்லை. இது அவரது பிற்போக்கான, நிலப்பிரபுத்துவகோட்பாடுகளை இன்னும் இறுக்கிப் பிடிப்பதையே நிரூபிக்கிறது. இதே போலவே அவரது 'அபூர்வராகங்கள் அவர்கள்' ஆகிய சினிமாக்களெல்லாம் அமைந்திருப்பதைக் காணலாம். 40 CARETS என்ற ஆங்கிலப் படத்தில் வயதான பெண் ஓர் இளைஞனையும் அவளின் மகள் ஒரு வயதானவனையும் இறுதியில் திருமணம் செய்து கொள்கின்றனர். (இது முதலாளித்துவ நாட்டு நடைமுறை: சுதந்திரம்) அபூர்வராகங்களில் இத்தகைய காதலை பாலச்சந்தர் தடைசெய்துள்ளார். (இது நிலப்பிரபுத்துவ நடைமுறையாகும்) 'அவர்கள்' படத்தில் கணவனை வெறுத்து தாலியை உண்டியலில் போடும் மனைவி பழைய காதலனை, அல்லது புதிய காதலனை தேர்ந்து அவனுடன் வாழ்வதாக கதையை முடிக்க பாலச்சந்தருக்கு துணிச்சலில்லை,

'மன்மத லீலை' மற்றோர் பிற்போக்கான சினிமாவாகும். பெண்களைப் பார்த்து ஆண்கள் பாலுணர்வால் உந்தப்படுவதும் ஆண்களைப் பார்த்து பெண்கள் கவரப்படுவதும் மனித இனத்தின் இயல்பான, இயற்கையான சுபாவமாகும். இக்கருத்தை ஒரு தலைப்பட்சமாக எடுத்து, கதாநாயகனுடையபலவீனம் மட்டும் என்று தனித்தோ ஆண் மக்கள் அனைவரதுமே என்றோ கூறமுனைவது மட்டுமல்ல அது மிகவும் பாவமான செயல் என்று ஒரு பார்ப்பன பிரசங்கியார் பாத்திரத்தைக்கொண்டு வந்து அழுத்திக் கூற முனைந்துள்ளார். இயல்பான உணர்வுகளை அசாதாரணமென கலைவடிவ மூலம் கூறி நிரூபிக்க முயல்வது கலைஞனுக்கு இருக்கவேண்டிய உண்மைக்கும், நேர்மைத்திறனுக்கும் இழுக்கானதாகும். (இதன் மூலம் முற்போக்கான கருத்தை எதிர்மறையாக வலியுறுத்தியிருப்பினும் கலைஞனை மன்னித்து விடலாம்)

மனிதனது இயல்பான சுபாவங்களை கூறுவதன் மூலமே முதலாளித்துவத்தில் கலைஞர்கள் வெற்றி பெறுகிறார்கள்.

(சேக்ஸ்பியரின் நாடகங்களில் காதல், குரோதம், பொறாமை, பேராசை, பழிவாங்கல், வன்செயல் ஆகிய குணம்சங்கள்யாவும் மனிதர்களது இயல்பான சுபாவங்கள் என்ற கருத்து அழுத்தமாக வெளிப்படுவதே அவரது வெற்றிக்குக் காரணமாகும். மன்னர்களிடமே இக் குணம்சங்கள் இயல்பாக இருந்தன என்ற உண்மையான கருத்து சேக்ஸ்பியர் காலத்தில் தலையெடுத்த பூர்ஷ்வா வர்க்கத்திற்கு நம்பிக்கையும் துணிச்சலும் தந்தது. அவ்வர்க்க நலனுக்கு பயன்பட்டதனாலேயே பூர்ஷ்வா வர்க்கம் இன்னும் சேக்ஸ்பியரை தலையில் வைத்துப் போற்றுகிறது. சேக்ஸ்பியரின் நாடகங்களில் சதையும் இரத்தமும் கொண்ட மனிதனைக் காணலாம் என்று முதலாளித்துவ விமர்சகர்கள் கூறுவதில் உண்மை இல்லாமலில்லை.)

ஒரு மனிதன் சாதாரண மனிதனிலும் பார்க்க குறைவாக, முட்டாளாக சினிமாவில் காட்டுவதை சாதாரண மக்கள் ரசிப்பதில் வியப்பில்லை. அத்தகைய படங்களைப் பார்க்கும்போது அந்த முட்டாளிலும் பார்க்க தாம் பரவாயில்லை என்ற எண்ணம் சாதாரண பார்வையாளரிடம் தோன்றி சிரிக்கச் செய்வது இயல்பே. ஹாடி போன்றவர்களின் படங்களின் வெற்றிக்கு இதுவே காரணம். 'மன்மதலீலை' வெற்றி பெற்றிருப்பின் அதன் காரணமும் இதுவேயாகும். சிறந்த கலைப்படைப்பு என்பதனால் அல்ல.

# கிராமப்புறத்தில் முதலாளித்துவம்?

—கணேஷ்—

இந்திய, இலங்கைக் கிராமங்களில் முதலாளித்துவ அமைப்பு, முதலாளித்துவ உற்பத்தி உறவு ஏற்பட்டு விட்டதான ஒரு தவறான கருத்தை பிரபல அரசியல் கட்சிகளே பிரசாரம் செய்து வ வது வியக்கத்தக்கது. முலாளித்துவத்திற்கும் அரைநிலப் பிரபுத்ருவத் திற்கும் உள்ள வேறுபாடுகளை அறியாதவர்களே இத்தகைய தவறான பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளனர்.

கிராமங்களில் முதலாளித்துவ அமைப்பு ஏற்படவில்லை, அரை நிலப்பிரபுத்துவமே நிலவுகிறது என்பதை பின்வரும் குணும்சங்களைக் கொண்டு கணிக்கலாம்:

1. முதலாளித்துவ அமைப்பு கிராமங்களில் இருப்பின் சிறு உற்பத்தியாளராகிய நடுத்தர விவசாயிகள், குத்தகை விவசாயிகள் பெருந்தொகையாக இன்று இருப்பது போல இருக்க மாட்டார். ஒரு புறம் உற்பத்திச் சாதனங்களைக் கொண்ட முதலாளிகளும் மறு புறம் கூலி உழைப்பாளரையுமே காண முடியும். குடும்ப உற்பத்தி முறையை காண்பது அரிதாகும்.

2. கூலி விவசாயிகளுக்கு நிரந்தர வேலையை முதலாளிகள் வழங்கி, வாரத்திற்கு அல்லது மாதத்திற்கு கூலி கொடுப்பர். வேலை நேரங்கள், நாட்கள், விடுமுறை நாட்கள் ஒழுங்கு படுத்தப்படும்.

3. சாதி, சமய வேறுபாடுகள், கூட்டுக்குடும்ப சமூக அமைப்பு ஆகிய மேல்மட்ட அமைப்பு முறைகள் அருகிவிடும். பெரும்பாலான மூடநம்பிக்கைகள் முதலாளித்துவத்தில் ஒழிந்து விடும். சாதி முறையை வைத்து கொத்தடிமை முறையில் உழைப்பைப் பெறுவது நின்றுவிடும்.

4. ஒரு கிராம அமைப்பைபார்த்தே முதலாளித்துவ அமைப்பா நிலப்புரபுத்துவ சாயலா என்று கூறி விடமுடியும். முதலாளித்துவத்தின் ஒழுங்கு முறைகள், தன் கூலிப்படையினருக்கு வீடுகளை அமைத்துக் கொடுக்கும் முறைகளை ஒரு தொழிற்சாலையை ஒட்டி இருக்கும் அமைப்பைப் பார்த்தே கண்டு கொள்ளலாம். கிராமங்களெல்லாம் குடிசைகளாகவே இந்திய கிராமப்புறங்களில் உள்ளன

5. கிராமங்களில் முதலாளித்துவம் ஏற்படுவதற்கு நில உச்ச வரம்புச் சட்டங்கள் கூட தடையாக உள்ளன. முதலாளித்துவம் என்பது அபகரிக்கப்படும் உபரியை மீண்டும் மீண்டும் அதே உற்பத்தியில் ஈடுபடுத்துவதாகும். பணக்கார விவசாயிகள் ஒரு குறிப்பிட்ட நிலைக்கு மேல் வளர முடியாத நிலையில் அபகரிக்கப்பட்ட உபரியை வேறு யந்திர உற்பத்தி போன்ற துறைகளில் முடக்குகின்றனர்.

6. முதலாளித்துவம் கிராமப் புறங்களில் நிலவின் தமது உற்பத்திப் பண்டத்தில் விலையை அவர்களே தீர்மானிக்கும் நிலையையும் பெறுவர். இன்று யந்திர உற்பத்தியாளரே தமது பண்டங்களதும் கிராமிய உற்பத்திப் பொருட்களது விலையையும் தீர்மானிப்பவராக இருக்கின்றனர். பணக்கார விவசாயிகள் பல மற்றவராக உள்ளனர்.

# மனிதரில் இத்தனை நிறங்களா?

**பகுதி 3.1 அடிமைச் சமுதாயம் : கடவுள் மதங்களின் தோற்றம்**

**— கோவி —**

25. அருவி யொலிகளில் ஆற்றின் முழக்கத்தில்
அவனவன் திகைப்படைய — ஐயோ
அவனவன் திகைப்படைய

அலையும் மரங்களின் ஆர்க்கம் ஓசையில்
அவர்மனம் பதைப்படைய — ஓ...
அவர்மனம் பதைப்படைய

இடியின் சப்தத்தில் இருளின் மயக்கத்தில்
இதயங்கள் துடிதுடிக்க — மக்கள்
இதயங்கள் துடிதுடிக்க

உருமும் விலங்குகள் ஓங்கும் ஒலிகளில்
உள்ளங்கள் நடுநடுங்க — கண
உள்ளங்கள் நடுநடுங்க

(வேறு)

26. ஆற்றைப் பார்த்து தலைகுனிந்தான் — அவன்
அச்சம் ஏனென விளங்கல்லே — ஆமாம்
அச்சம் ஏனென விளங்கல்லே

காற்றைக் கண்டு கலங்கிநின்றான் — அவன்
கலக்கம் ஏதெனத் தெரியல்லே — ஓ
கலக்கம் ஏதெனத் தெரியல்லே

மரத்தை நோக்கிக் கையெடுத்தான் — அவன்
மாற்றம் யாதெனப் புரியல்லே — அந்த
மாற்றம் யாதெனப் புரியல்லே

மதமும் கடவுள் தோன்றுவதை — அவன்
மார்க்கம் ஐயோ தடுக்கவில்லே — பழம்
நிறமுந் தானும் நினைக்கவில்லே.

# கேள்வி? பதில்!

— வேல் —

**கே:** பூட்டோ தூக்கிலிடப்பட்டது பற்றி உங்கள் கருத்தென்ன?

ம. சின்னராசா, யாழ்

**ப:** பூட்டோவை ஒரு தனிமனிதராகப் பார்த்து அவர் மரணத்திற்காக இரக்கப்படுவது தவறு. அவ்வாறு பார்ப்பது முதலாளித்துவநிலப்பிரபுத்துவ பார்வையாகும். இந் நிகழ்ச்சியை ஒருவர்க்க மோதலாக நாம் பார்க்க வேண்டும். பூட்டோ ஒரு வர்க்கத்தைச் சார்ந்து நின்றுர். அவ்வர்க்கம் எது? ஈவிரக்கமின்றிப் பழிவாங்கும் வர்க்கம் எது?

இன்றைய சமூக அமைப்பில் பாகிஸ்தானின் வர்க்க அமைப்பு ஓரளவு விசித்திரமானதே. பாகிஸ்தானைச் சார்ந்த தேசிய முதலாளிகள் இந்தியாவிலிருந்து தனியே அந்நாட்டைப் பிரித்தெடுத்தனர். ஆயினும் அத் தேசிய முதலாளிகளால் தனித்து இயங்க முடியவில்லை. அவர்கள் ஏகாதிபத்திய நாட்டு முதலாளிகளுடன் இணைந்தே யந்திர உற்பத்தியை விரிவாக்கினர். யந்திர உற்பத்தியில் ஈடுபட்டு வளர்ச்சியடைந்த இத்தரகு முதலாளிகளே இராணுவத் தளபதிகளாகவும் இருந்ததே இந் நாட்டின் சமூக அமைப்பின் தனிச் சிறப்பாகும்! தரகு முதலாளிகள் அதிகாரத்துவ முதலாளித்துவத்தையும்-அரசு முதலாளித்துவதையும் சார்ந்து, உதவியை வேண்டி நிற்பது இயல்பே. உள்நாட்டு உபரியையும் அப்பொழுதேயே தம் தேவைக்காக பயன்படுத்த முடியும். பாகிஸ்தானில் இராணுவ ஆட்சியாளரே யந்திர உற்பத்தியையும் தலைமை தாங்கி நடாத்தினர். (இந்தியாவில் காலனி ஆதிக்கம் முடிந்ததும் தேசியமயமாக்கப்பட்ட இரும்பு உற்பத்தி, ஏர் இந்தியா சர்வதேச விமான சேவைக்கு டாட்டாவே தலைவராக இருந்தார். டாட்டா பிர்லா போன்ற தொழிலதிபர்கள் தரை, விமான, கடற்படை தளபதிகளாக இருக்கவில்லை. அதனாலேயே அங்கு பாகிஸ்தான் போன்ற இராணுவ ஆட்சி ஏற்படவில்லை.)

இராணுவத்தைச் சார்ந்த சில பத்து குடும்பங்களின் ஆதிக்கத்திலேயே யந்திர உற்பத்தி, பாங்குகள், இன்சூரன்ஸ் கம்பனிகள் இருந்தன. இதனாலேயே கிழக்குப் பாகிஸ்தானில் அங்குள்ள தேசிய முதலாளிகள் ரஹமான் தலைமையில் கிளர்ந்து எழுந்த போது யயாகானால் ஈவிரக்கமின்றி அடக்கப்பட்டனர்.

இந்தியா தலையிட்டு தனக்குவாய்ப்பாக நாட்டைப் பிரித்து வைத்தது. இப் பிரிவினை இராணுவ ஆட்சியின் பலவீனத்தைக் காட்டியது. இதைத் தொடர்ந்தே பூட்டோ அமெரிக்காவின் ஆசீர்வாதத்துடன் பதவி ஏற்றார். பூட்டோ இராணுவத் தரகு முதலாளிகளை பாதிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டார். அவர்களை நாட்டைவிட்டு வெளியே செல்லவிடாது தடைசெய்த தோடு 30க்கு மேற்பட்ட அடிப்படையந்திர உற்பத்தி கம்பெனிகளை தேசியமயமாக்கினார். இவ்வாறு மக்களின் ஆதரவை திரட்ட முயன்றார். இவற்றால் அமெரிக்க ஆதரவு, உதவிகளும் தடைபட்டன.

பூட்டோ எண்ணெய் நிலப்பிரபுத்துவத்தில் ஊறிய நாடுகளை உதவிக்கு நாடினார். முக்கியமாக சவூதி அரேபியா வேண்டிய படி உதவிகள் வழங்கியது. இவ் உதவியாவையும் கிராமப்புற பணக்கார விவசாயிகளுக்கு பூட்டோ வழங்கினார். பசுமைப் புரட்சிக்காகவே பெருந்தொகை பணத்தை வீசினார். சவூதி அரேபிய மன்னரின் உதவிக்காக நாட்டை இஸ்லாமிய மதச் சார்பாகவும் வளர்க்க வேண்டிய பணியும் பூட்டோவிற்கு ஏற்பட்டது.

இதனால் நகரங்களில் வாழ்ந்த பூர்ஷ்வா, குட்டி பூர்ஷ்வாக்களின் பொழுதுபோக்குகள் வாழ்க்கை முறைகள் பாதிக்கப்பட்டன. மதுக்கடைகள் மூடப்பட்டு மேல்நாட்டு சினிமா, நடனங்கள், நைட் கிளப்புகள் யாவும் கட்டுப்படுத்தப்பட்டன. இராணுவ பூர்ஷ்வா வர்க்கம் பலவகையிலும் பாதிக்கப்பட்டது. ஆயினும் கிராமப்புறங்களின் ஆதரவு பூட்டோ பக்கமாகவே இருந்தது. இந்தியா போன்றே தேர்தல் வெற்றிகள் பணக்கார விவசாயிகளின் கையில் இருந்தது. கிராமப்புறங்களில் வாழ்ந்த 80 வீதமான கூலி, ஏழைவிவசாயிகளின் வோட்டுகளுடன் பணக்கார விவசாயிகள் பூட்டோவையே சார்ந்து நின்றனர். 1977ல் நடைபெற்ற தேர்தலில் பூட்டோ ஒழுங்கற்ற முறைகளை கையாண்டார் என்ற குற்றச்சாட்டு உள்ளது. அத்தகைய நடவடிக்கையில் ஈடுபடாமலே பூட்டோ பெரிய வெற்றி ஈட்டியிருக்க முடியும். பூட்டோவிற்கு நகர குட்டி பூர்ஷ்வா வாக்காளர் எதிர்ப்புக் காட்டினர். நிலப்பிரபுத்துவ கோட்பாடுகளை எதிர்ப்பதில் தொழிலாளர்களும் பாகிஸ்தான் தேசிய கட்சியுடன் இணைந்து நின்றனர்.

தொழிலதிபர்கள், வியாபாரிகள், தேசியமயமாக்கப்பட்டதால் பாதிக்கப்பட்ட யந்திர உற்பத்தியாளர்களும் என்னை ஒழித்துவிட திட்டமிட்டனர் என் பூட்டோ 'நான் கொலை செய்யப்பட்டால்' என்ற, அண்மையில் வெளியான தம் நூலில் கூறி

யுள்ளார். பூட்டோ தூக்கிலடப்பட்ட அன்று லண்டனிருந்த பாகிஸ்தான் வெளிநாட்டமைச்சர் பூட்டோ மீண்டும் நிலப் பிரப்புத்துவத்திற்கு நாட்டை இழுத்துச் செல்ல முயன்றார் என நிருபர்களிடம் கூறியதிலும் உண்மை உள்ளது.

நிலப்பிரபுத்துவப் போக்கை ஈவிரக்கமின்றி ஒழித்துக் கட்ட முயலுவது யந்திர உற்பத்தியில் ஈடுபட்ட முதலாளிகள் கொள்கையேயாகும். தரகு முதலாளிகள் பெரும்பாலும் இம் முயற்சிகளில் ஈடுபடுவதில்லை. இராணுவ முதலாளிகள் ஆளும் வர்க்கமாக இருப்பதனாலேயே இத்தகைய தீவிரவாத முயற்சியில் அங்கு ஈடுபட்டனர்.

**கே:** அமெரிக்க ஏகாதிபத்தியத்திலும் பார்க்க சோவியத் ரஷ்யா விற்கு சீனா ஏன் அஞ்சுகிறது?

க. முத்தையா, கண்டி.

**ப:** அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் தற்காப்பு நிலையான வீழ்ச்சி பற்றியும் சமூக ஏகாதிபத்தியமாக வளர்ந்துள்ள ரஷ்யாவின் ஆக்கிரமிப்பு நிலையான வளர்ச்சி பற்றியும் சென்ற இதழில் (54) இதே பகுதியில் குறிப்பிட்டேன். சோவியத் அதிகாரிகளின் ஆதிக்கத்தில் உபரி குவிவதுபோல அமெரிக்க அதிகாரிகளிடம் குவிவதில்லை. உபரியைப் பயன்படுத்துவது இன்று ரஷ்யாவில் உழைக்கும் மக்கள் கையில் இல்லாது அதிகாரிகள் கையில் உள்ளது. இவ்வாபத்தான நிலை மூன்றாவது உலக யுத்தத்திற்கு இட்டுச் செல்லக் கூடும் என சீனா அஞ்சுகிறது.

**கே:** ஈரானில் ஷாவின் அதிகாரிகளை தற்போது ஈவிரக்கமின்றி பழி வாங்குவது அநாகரிகமாக இல்லையா? மதத்தலைவர் கொய்மேனி யும் இதை அனுமதிக்கிறாரே இது நீதியா?

ப. சுதா, கொழும்பு

**ப:** ஒரு வர்க்கம் தலை தூக்கும் போது அதன் வளர்ச்சிக்குதடையாக இருக்கும் எதிர் வர்க்கத்தை ஈவிரக்கமின்றி அழிக்க முயல்வது மனித வரலாற்றில் சாதாரணமாகக் காணக்கூடிய நிகழ்ச்சியே யாகும். நிலப்பிரபுத்துவ ஆளும் வர்க்கத்தை பூர்ஷ்வா வர்க்கம் அழித்தொழித்ததை வரலாற்றில் பல இடங்களில் காணலாம். அதேபோலவே பாட்டாளி வர்க்கப் புரட்சி ஏற்பட்டதும் பாட் டாளி வர்க்கம் பூர்ஷ்வா வர்க்கத்தை பழிவாங்கியே தீரும். இது தவிர்க்கமுடியாத வரலாற்று நிகழ்ச்சியாகும்.

(அமெரிக்காவில் ஐரோப்பிய பூர்ஷ்வாக்கள் நுழைந்த போது அங்கு வாழ்ந்த ஆதிக்குடிகளாகிய சிவப்பிந்தியர்களை மிருகங்களைப் போல சுட்டுத்தள்ளியதை வரலாறு அறியும் ஏனெனில் பூர்ஷ்வா வர்க்க வளர்ச்சிக்கும் ஆதிக்கத்திற்கும் அவர் கள் தடையாக இருந்தனர்.)

# வெளிவந்துவிட்டது!

*தமிழவேள் எழுதிய*

கம்பராமாயணம் காட்சிப் படலம்

காரைக்காலம்மையார் புராணம்

தமிழ் பயிற்சி 8ம் வகுப்பு

சைவசமய பாடம் (அச்சில்)

க. பொ. த. சாதாரண வகுப்பு

*தயாளன் எழுதிய*

புதிய பௌதிகவியற் பயிற்சி (வெப்பவியல்)

க. பொ. த. உயர்தர வகுப்பு

விஜயலட்சுமி புத்தகசாலை

*248, காலி வீதி வெள்ளவத்தை தொலை: 88930*


## குமரன் சந்தா விபரம்

| | | | | |
|---|---|---|---|---|
| **1 ஆண்டு** | ... | ... | ... | ரூ. 7-50 |
| **6 மாதங்கள்** .... | | .... | ... | ரூ. 4-00 |
| **தனிப்பிரதி** ... | | .... | .... | சதம் 60 |

*பழைய சந்தாதாரர் தபாலட்டை எழுதி தமது பிரதிகளைப் பெற்றுக்கொள்ளலாம்.*


# குமரன்

201, டாம் வீதி, கொழும்பு-12.
தொலைபேசி : 21388

# கவிஞர் கண்ணதாசன் - 2

## — ஒரு மதிப்பீடு —

— த. ச. இராசாமணி —

**தேசிய உடைமை**

இன்றைக்கு என்ன பார்க்கிறோம்? பி. ஆர். சி. தேசியயுடைமை யாக்கப்பட்டிருக்கிறது. அதில் அதிகாரம் செய்வது யார்? எங்கோ மேலேயிருந்து உத்தரவு வருகிறது. கீழே இருப்பவர்கள் செக்கு மாடாய்ச் சுழல்கிறார்கள். ஆனால் ஓட்டுநருக்குத் தெரியும், எப்படி ஓட்டினால் நல்லது என்று. ஆலையிலே வேலை செய்பவர்களுக்குத் தெரியும், எப்படி செயல்படுத்தினால் லாபம் என்று, ஆனாலும் என்ன நடக்கிறது. என். டி. சி. - நேஷனல் டெக்ஸ்டைல் கார்ப்ப ரேஷன் - அரசாங்கத்தின் கையிலே இருக்கிறது. நலிந்த ஆலைகளை அரசாங்கம் கையிலே எடுத்துக் கொண்டிருக்கிறது- ஆனால் அங்கே வேலை செய்கிற தொழிலாளியும் வேலை நிறுத்தம் செய்கிறான். ஏன்? அவன் ஒரு கூலி அடிமையாகத்தான் இருக்கிறானேயொழிய அவனுக்கு எந்த உரிமையும் கிடையாது. அதனாலேதான் எல்லா அதிகாரமும் மக்களுக்கு வேண்டும் என்று லெனின் சொன்னார். அதிகாரியைத் தேர்ந்தெடுக்க வேண்டுமே, யார் தேர்ந்தெடுப்பது? யாரோ சென்னையிலே இருப்பவர்களோ, டெல்லியிலே இருப்பவர் களோ அல்ல. அந்தப் பகுதி மக்கள்தான் தேர்ந்தெடுக்க வேண்டும். அவன் சரியாகச் செயல்படவில்லையென்றால் அவனை வெளி யேற்றுகிற அதிகாரம் வேண்டும். அது அல்லவா சோஷலிசம். அது இருக்கிறதா? இல்லை. இதற்கு ஏற்ற சமுதாய அமைப்பிருக் கிறதா? இல்லை.

அடுத்துச் சொல்கிறான்.

> அடிவயிறு பற்றிவிட்டால்
>     அடுத்து நடப்பதென்ன?
> கொடியபசி வந்து விட்டால்
>     குமுறும் எரிமலைதான்.
> நீங்களே வைத்தகொள்ளி
>     நீள்காற்றில் மேலெழுந்து
> ஓங்குவதைக் கண்டபின்னர்

(நீ தானே வைத்தாய். நாங்கள் அல்ல. எங்களுடைய நேச சக்திகள் அல்ல. நீ வைத்த கொள்ளிதானே அய்யா, உன்னை சுட்டுக்கொண்டிருக்கிறது).

> நக்சல்பாரிப் புரட்சி
>     நாட்டில் எழுந்ததற்கு
> நச்சுபரி மாறிநீர்
>     நாளும் பொறுப்பேற்பீர்!

(இது தோன்றுகிறது என்றால் காரணம் யார்? உன்னுடைய கொடுமை அல்லவா? உன்னுடைய நச்சுத் தன்மை அல்லவா?)

'துப்பாக்கி யாலேதான்
துரைத்தனங்கள் சேரு'மெனச்
செப்பியவன் அந்தச்
சிவப்புநிலா மாசேதுங்;

(இது கண்ணதாசன் பாட்டு. என் பாடலல்ல)

சீனாக்காரன் பகைவன்
தெரியும் நமக்கெல்லாம்:
ஆனாலும் மாவோவை
அணைக்கச் சிலர் பிறந்தார்!

ஏன் என்னும் காரணத்தை
எண்ணாமல் காகிதத்தில்
பேனாவை ஓடவிட்டால்
பேய்க்காற்று நின்றிடுமோ!

மேட்டுக்குடி வாழ்க்கை
மென்மே லுயர்ந்துவர
நாட்டுக்குடி வாழ்க்கை
நடுத் தெருவில் நிற்பதனை.

மாற்றி யமைத்தாலே
மாசேதுங் சிந்தனைகள்
காற்றில் பறந்துவிடும்
கனவும் அடங்கிவிடும்!

அல்லாமல் 'ராஜா'க்கள்
ஆர்ப்பாட்டம் செல்லாது!
செல்லாது மட்டுமல்ல
தேசம் வியப்பாகும்!

உங்களையும் மீறி
உலகத்தில் ஓர்புரட்சி
திங்களைப்போல் தோன்றியதைத்
தெரிவிக்கும் வரலாறு!

இப்படித்தான் சீனாவில்
இருந்தான் சியாங்கேஷக்!
அப்படித்தான் ஜார்மன்னன்
ஆண்டிருந்தான் ரஷ்யாவை!

பசியால் திருட்டுவரும்
பகைவளரும் பொய்விளையும்
பசியால் உறவினிலும்
படுகொலைகள் மெத்தவரும்!

பசியால் புரட்சிவரும்
பாமரர்கள் சேர்ந்தெழுந்தால்
அசையாத மாளிகையும்
ஆடிப்பொடிபடுமாம்!

தொழிலைப் பொதுவாக்கிச்
சொத்துரிமை நீக்கிவிட்டால்
அழிவைத் தடுப்பதற்கு
அடிப்படைபோ லாகிவிடும்!

வேலையில்லாத் திண்டாட்டம்
விரைவில் ஒழிவதற்குச்
சாலவழி வகுத்தால்
ஜனப்புரட்சி நின்றுவிடும்!

என்ன முதலாளி!
இவை உமக்குச் சம்மதமா?
என்ன மனிதர்களே!
இதிலுமக்குச் சங்கடமா?

இந்தப் பாட்டில் தெரிகிறதா? உற்பத்திக் கருவிகளைக் கையாளும் தொழிலாளியையும் உற்பத்திக் கருவிகளில் ஆதிக்கம் செலுத்தும் முதலாளியையும் தனித்தனியே நிறுத்துகிறான். இவர்கள் இருவரையும் பார்த்துக் கேட்கிறான். எனவே தான் இவன் இவ்விரண்டு வர்த்தகத்தையும் சேர்ந்தவனல்ல என்பது தெரிகிறது.

**தொழிலாளிக்கு**

வகுப்புவெறி பற்றியெல்லாம்
வாயாரப் பேசுகிறீர்!
வர்க்கப்போர் பற்றி உங்கள்
வாயேன் திறப்பதில்லை?

கண்முன் நடப்பதனைக்
காணாமல் நீரிருந்தால்
கண்ணுக்குப் பின்னாலே
காரியங்கள் ஆகிவிடும்!

சட்டத்தால் எந்தத்
தத்துவமும் மாறாது!
சுட்டாலும் நெஞ்சுரத்தைத்
சூடு தவிர்க்காது!

எத்தனைதான் நீங்கள்
எதிர்ப்புரட்சி செய்தாலும்
பத்தாண்டுக் குள்ளாகப்
பணத்தொந்தி சாய்ந்து விடும்!

தத்துவத்தின் எச்சரிக்கை
சமதருமம் நாடுங்கள்
சத்தியத்தின் எச்சரிக்கை
சரித்திரத்தை மாற்றுங்கள்!

யார் பாடுகிறார்? கண்ணதாசன்!

இன்னொரு பாடலை உங்களுக்கு எடுத்துக் காட்டுகிறேன் கண்ணதாசனைப்பற்றி எப்படியாவது பேசிவிடுவது என்பது பொருள் அல்ல. அவன் ஒரு வர்க்கத்தின் பிரதிபலிப்பை எதிரொலிக்கின்றான். அந்த வர்க்கம் என்ன செய்யும் என்பதைப் பின்னாலே சொல்கிறேன்,

தொழிலாளர்களைப்பற்றிப் பாடுகின்றான்.

நெஞ்சை நிமிர்த்துங்கள் தோழர்களே இனி
நேருக்கு நேர்நின்று பார்ப்போம் - சம
நீதிக்குப் போர்ப்படை சேர்ப்போம் - இனிப்
பஞ்சைப் பராரிகள் துஞ்சி இரந்துண்ணும்
பட்டினிக் கோலத்தை மாய்ப்போம் — நெஞ்சின்
பாரத்தை வேருடன் சாய்ப்போம்!

ஓட்டைக் குடிசைக்குள் கூட்டுக் குடும்பங்கள்
வாட்டி வதைவதை மாற்றி - அதை
மாளிகை மஞ்சத்தில் ஏற்றி - இந்த
நாட்டுப் பொருள் எங்கள் வீட்டுப்பொருள் என்று
நாடிடுவோம் படைகூட்டி - விழி
காட்டிடுவோம் கனம் ஊட்டி!

ஆலைய ரசுகள் கோவைமி ராசுகள்
பாலில் மிதந்தது போதும் - அதைக்
காலில் மிதித்திட வாரும் - இங்கு
வேலை இழந்தவர் வீதி முனைகளில்
கூழுக்க லைவதைப் பாரும் - அவை
கூட்டத்தை ஓரணி சேரும்!

தாயகத்தில் பொங்கும் வாழ்க்கை வளத்துக்குத்
தர்மகர்த் தாக்களைப் போலே - உள்ள
மர்ம மனிதர்களாலே - இங்கு
தீயும் வயிறுகள் சேர்ந்தெழுவோம் அந்த
தீயின் கிளைகளைப்போல - கொடுந்
தீயவர் மாளிகை மேலே!

கூடிக் கலைகின்ற நாடகமேடையின்
கோஷத்தை நம்பி ஏழை - வெறும்
கூட்டத்தை நம்பிய கோழை - எட்டு
மாடிமனி தரின் மஞ்சத்தில் ஆடிடும்
மந்திரி மார்களை நம்பி - இன்னும்
வாழ்ந்து பொருளென்ன தம்பீ?

சட்டமன்றங்களும், பாராளுமன்றங்களும் உன்னுடைய பிரச்சி னையைத் தீர்க்கும் என்று எண்ணுகிறாயா? இதை நம்பி நம்பி எத்தனை நாளைக்கு நிற்கப் போகிறாய் என்று கேடகிறான்.

பாதைப் படுக்கைக்கும் பைப்புத் தண்ணீருக்கும்
போதைப் பொருளுக்கு மாக - இந்தப்
பூமிக் குடையவர் சாக - உயர்
கால், சுவை, கல்வி, செல்வங்கள் யாவையும்
காரியக் காரர்கள் ஆள - நாம்
கண்டதுதான் கதை நீள!

மூடிய கைகளை மேலுயர்த் உந்தன்
மூச்சில் கனல்விட்டுக் காட்டு - உந்தன்
பேச்சில் புரட்சியை ஊட்டு - பல
போடிப் பாராரிகள் ஒன்று பட்டாலது
கோட்டை தகர்த்திடும் கூட்டு - அதைக்
கூட்டட்டும் நாட்டிலென் பாட்டு.

**வரலாற்றுப் பாத்திரம்**

இவை கண்ணதாசனுடைய பாட்டேயொழிய வேறு யாருடைய பாட்டும் அல்ல. நான் எதற்காகச் சொல்கிறேனென்றால் கண்ண தாசனை ஒரு முற்போக்கு சக்தியாகக் காட்டவேண்டும் என்று எனக்கு அக்கரை கிடையாது. ஆனால் அதே சமயத்தில் அவனுடைய வரலாற்றுப் பாத்திரத்தை மறப்பது என்பது மகா கோழைத்தனம் மட்டுமலல, அது நமக்கே ஒரு குழி தோண்டுவது போலாகும். அவனுக்கு ஒரு பாத்திரம் இருக்கிறது. அவன் தன்னுடைய பாத் திரத்தைச் செவ்வையாகச் செய்கிறான். நான் முதலிலேயே சொன் னேன், இநதப் பாடல்கள் எப்போது வருகின்றன? எண்ணிப் பார்க்க வேண்டும்.

தொழிலாளி வர்க்கத்தினுடைய வீச்சு அதிகமாகும் போது, தொழிலாளி வர்க்கத்தினுடைய உணர்ச்சி வேகங்கள், நடவடிக் கைகள் சமுதாயத்திலே மேலோங்கி நிற்கின்றபோது, அவனுடைய பாடல்கள் இப்படி வருகின்றன. ஆனால் தொழிலாளிவர்க்கம் துவண்டு போகின்றபோது, சோர்ந்து போகின்றபோது, அடங்கிப் போகின்றபோது, அவனுடைய பாடல்கள், எழுத்துக்கள் 'அர்த்த முள்ள இந்துமதத்தில்' போய் நிற்கிறது.

## உற்பத்தி உறவுகள்

கண்ணதாசனைச் சரியாக மதிப்பிட வேண்டுமானல் பல நூற்றாண்டுகள் நாம்-இந்திய-தமிழக-வரலாற்றினைப் பார்த்தல் வேண்டும். பொருள் உற்பத்தியில் ஏற்படுகிற உறவுதான் தொழிலாளிக்கும் முதலாளிக்கும்-பண்ணையாருக்கும் பண்ணை அடிமைக்கும்-அடிமைக்கும் எஜமானனுக்கும் இருக்கும் உறவுதான் சமுதாய உறவுகளையே வரையறுக்கிறது. கணவன், மனைவி-பெற்றோர், பிள்ளைகள்-ஆசிரியர் மாணவர்கள், அதிகாரி-ஊழியர்கள் ஆகியோரின் உறவுகளையும் வரையறை செய்கிறது. உற்பத்தி உறவில் மாற்றம் ஏற்படும் போது சமுதாயத்தின் மற்ற உறவுகளும் மாற்றம் அடைகின்றன. அப்பொழுது புதிய வர்க்கங்களும் தோன்றுகின்றன.

சுமார் முந்நூறு ஆண்டுகட்கு முன்புவரை இத் தமிழ் நாட்டில் உற்பத்தியில் நிலவிய உறவு முறைகள் என்ன? இந்த மாற்றத்தில் ஆங்கிலேயர்களின் பங்கென்ன? என்றெல்லாம் ஆராய்தல் வேண்டும்.

ஆங்கிலேயர் இங்கு வருவதற்கு முன்பு இங்குக் குடிசைத் தொழில் வழியாக அதாவது கையால் நூற்றல், கை நெசவு, கையால் ஏர் பிடித்து உழுது பயிரிடுதல் என்ற இயற்கையான வழி முறைகள் வழியாகவே பொருட்களை உற்பத்தி செய்து வந்தனர். இப்படி உருவாக்கப்பட்ட பொருட்களை வணிகர்கள் சாதாரண மக்களுக்கு விற்று வந்தனர். இந்தச் சமுதாய அமைப்பை மையமாக வைத்தே-வர்க்கங்களை வைத்தே-இலக்கியங்களை உருவாக்கினர். இப்படித்தானே இருக்க முடியும். இதுதானே விஞ்ஞானத்தோடு ஒட்டிய நிலை .சங்க இலக்கியங்களின், காவிய இலக்கியங்களின், சிற்றிலக்கியங்களின் பங்கு இதுவாகத்தானே இருந்தது.

இங்கு ஆங்கிலேயர்கள் வந்த பின் நிலைமை மாறியது. உற்பத்தி உறவில் பெரிய மாற்றத்தையே உருவாக்கினர்.

ஆங்கிலேயர் விஞ்ஞானவழி முறைகளின் மூலமாக-அதாவது நீராவி மின்சாரம் போன்றவற்றின் வழியாக பொருள் உற்பத்தி முறையை மாற்றினர். இந்திய-தமிழக-வணிகர்களிடமிருந்து சாதாரண மக்களைப்-பொதுமக்களைப்-பிரித்தனர்: ஒதுக்கி வைத்தனர்.

அரசு யந்திரம்-(அரசு யந்திரம் என்றால் நிர்வாகம், நீதி, போலிஸ், படை, சிறை இவற்றை நினைத்தல் வேண்டும்), மேலும் மேலும் வளர்ந்து விரிவடைந்தன. தொழில்களும் நவீனமடைந்தன. இதன் விளைவு என்ன?

## சிறுவுடைமை வர்க்கம்

இந்திய-தமிழக வரலாற்றில் இல்லாத அரசின் தேவையை நிரப்பக்கூடிய, ஐரோப்பிய விஞ்ஞான அறிவைப்பெற்ற ஒரு புதிய வர்க்கம் தோன்றியது. அவ்வர்க்கத்தைத்தான் சிறுவுடைமை வர்க்கம் என்கிறோம். இவர்கள்தானே இன்று படித்தவர்களில் பெரும்பான்மையினர். இந்தப் பல்லாயிரக்கணக்கான மக்களின் ஆசைகளை-உணர்வுகளை-விருப்பு வெறுப்புக்களை-பண்டைய இலக்கியங்கள், அது திருக்குறளாக இருந்தாலும் சரி, நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரமாக இருந்தாலும் சரி, கம்பராமாயணமாக இருந்தாலும் சரி எதிரொலிக்கவில்லை. இவர்களின் உணர்வுகளை எதிரொலிக்காத இவ்விலக்கியங்களை அணுகினாலும் நெருங்கினாலும் அதில் தோய்ந்து நிற்க முடியவில்லை. இவர்களின் உணர்வுகளை, விருப்பு வெறுப்புக்களை வெளிப்படுத்த ஒரு கவிஞன்-எழுத்தாளன் வேண்டுமல்லவா! அவர்களுக்குள் குறிப்பிடத்தக்கவர் கண்ணதாசனே. அவன் பின்னால் அவ்வர்க்கம் நிற்பதும் அவ்வர்க்கத்தின் பக்கம் அவன் சார்ந்து நிற்பதும் தவிர்க்க முடியாததல்லலவா!

இந்த நடுத்தர வர்க்க-சிறுவுடைமை வர்க்கம் என்று சொல்லுகிறோமே, அது மத்தியிலே நின்று இங்கே தொழிலாள மக்களைப் பார்க்கும். அங்கே மாளிகையிலே உலவுகின்ற மக்களை பார்க்கும். அப்படிப் பார்க்கின்றபோது அது என்ன நினைக்கிறது? வானத்து தாரகைகளையெல்லாம் நகையாகச் செய்து அணிந்து கொண்டிருக்க நினைக்கிறது. அவர்களைப்போல் உல்லாச வாழ்வு வாழ வேண்டும் என்று நினைக்கிறது. ஆனால் இன்னொரு சமயத்திலே இங்கே ஒரு புரட்சிக் கனல் தோன்றுகின்றபோது அங்கேயும் போய் நிற்கின்றது. ஆனால் நீங்கள் இன்னொன்று கேட்கலாம்

## ரெயில்வே போராட்டத்தின் போது

அண்மையில் ரயில்வே ஸ்டிரைக் நடந்தது. இந்தியா முழுவதும் நடந்தது. இதில் கண்ணதாசன் எங்கே இருந்தான்? போராடுகின்ற மக்களின் பக்கத்திலே இல்லை. எதிராக நின்றான். அவனுடைய பாடல்கள் வானொலியிலே பரப்பப்பட்டன அல்லவா! ஏன் அப்படி நின்றான் என்றால், ரயில்வே வேலை நிறுத்தம் நடந்தது என்பது உண்மைதான். ஆனால் அது சமுதாயத்திலே ஒரு பெரிய எழுச்சியை உண்டுபண்ணிற்றா? இல்லை. கார்கள் ஓடிக்கொண்டிருந்தன, தொழிற்சாலைகள் இயக்கிக்கொண்டிருந்தன. பள்ளிக்கூடங்கள் நடந்து கொண்டிருந்தன. நடைமுறை எதுவும் குறையவில்லை, தடைப்படவில்லை.

(தொடரும்)

# குழந்தையின் குரல்

ஒகு நாட்டை ஒரு மன்னன் ஆண்டு வந்தான். அவன் இட்டதே சட்டம். பலமான இராணுவத்தையும் தனக்குத் துதிபாடும் நிலப் பிரபுக்களையும் தனக்கு ஆதரவாக வைத்துக் கொடுங்கோலாட்சி நடாத்தினான். 'இம்' என்றால் சிறைவாசம் 'அம்' என்றால் வனவாசம். நிலப்பிரபுக்களும் இராணுவத்தினரும் எவ்வித கொடுமைகளை மக்களுக்குச் செய்தபோதும் அவன் அவர்களைக் கட்டுப்படுத்துவதில்லை; தண்டிப்பதில்லை. இதனால் மன்னன் செய்வதெல்லாவற்றையும் அவர்களும் வரவேற்று மன்னனைப் பாராட்டி வந்தனர்; நாட்டில் ஒழுங்கான நல்ல செங்கோலாட்சி நடைபெறுவதாகப் புகழ்ந்து வந்தனர்.

தனது ஆட்சிக்கு எதிராக எவராவது இருக்கிறார்களா என்பதை மன்னன் ஒரு நாள் பரீட்சிக்க விரும்பினான்.

மன்னர் ஊர்வலமாக வரப்போகிறார் இராணுவத்தினர், நிலப் பிரபுக்கள், மக்கள் அனைவரும் தெருவில் ஒழுங்காக நின்று அஞ்சலி செலுத்த வேண்டும் என்று நாடெங்கும் மந்திரி மூலம் பறையடிக்கச் செய்தான்.

ஆறு வெள்ளைக் குதிரைகள் பூட்டிய வண்டியில் மன்னன் மணி முடிமட்டும் தாங்கி நிர்வாணமாக நின்றுகொண்டிருந்தான். முன்னும் பின்னும் இராணுவத்தினர். அரசனைப் பார்த்து வாழ்த்துபவர் தவிர சிரிப்பவர்களையும் கைது செய்ய, தயாராகச் சென்றனர்.

நிலப்பிரபுக்கள் பக்கமாக, மன்னனை வாழ்த்துபவர் ஒருபுறம், மலர் தூவுபவர் மறுபுறம். மக்கள் பக்கம் ஒரே அமைதி; ஒரே மௌன, மரண அமைதி. எவரும் வாய்திறக்கவில்லை. மக்கள் எனக்கு அடங்கியே வாழ்கிறார்கள் என்ற மகிழ்வுடன் மன்னன் ஊர்வலமாகச் சென்றுகொண்டிருந்தான்.

திடீரென அமைதியைக் குலைத்துக்கொண்டு ஒரு குழந்தையின் குரல் எழுந்தது:

"சீச்சீ, ராசா வெக்கத்தைக்காட்டிக்கொண்டு போறார்"

"சீச்சீ வெக்கம்" என்று மற்றச் சிறுவர்களின் குரல்கள் தொடர்ந்து எழுந்தன,

மக்கள் மன்னனுக்குக் கல்லடிக்கத் தொடங்கினர்.

# வழிபாடு

— மாதவன் —

அதிகாலையிலேயே இரத்தினம் வீட்டில் அழுகைச் சத்தம் கேட்டது. இரத்தினத்தின் இளையமகன் இந்திரன் பாடசாலைக்கு போக மாட்டேன் என அடம்பிடித்துக்கொண்டிருந்தான். முதல் நாள் பாடசாலையில் வகுப்பில் குழப்படி செய்ததாக ஆசிரியர் அடிமட்டத்தால் அடித்தது அவன் நினைவில் வந்து கொண்டிருந்தது. ஆசிரியர் வகுப்பறையில் இல்லாதபோது, சிறுவர்கள் ஆசிரியரின் மேசைமேல் ஏறி, கீழே பாய்ந்து விளையாடிக்கொண்டிருந்தார்கள். ஆசிரியர் வகுப்பில் நுழைந்தபோது அகப்பட்டவன் இரத்தினமே. நல்ல அடி.

இது தவிர மறுநாள் தவருது மனனம் செய்து கொண்டுவரும்படி ஆசிரியர் கூறிய 'தோடுடைய செவியன்' என்ற தேவாரத்தை அவன் மனனம் செய்யவில்லை. திருஞானசம்பந்தர் மூன்று வயதிலேயே இத்தேவாரத்தை தாமே இயற்றி இறைவனை அடையாளம் காட்டினர் என்று ஆசிரியர் சொல்லியிருந்தார். அவனுல் அதை நம்பமுடியவில்லை. எதிர்த்துக் கேட்கவும் அச்சம். கேட்டால் அடிமட்டத்தால் பதில் வரும் என்பதை அவன் அறிவான்.

இன்று மீண்டும் வகுப்பில் அடிவிழும் என்ற அச்ச உணர்வில் உந்தப்பட்டு, பாடசாலைக்கு போவதில்லை என அடம்பிடிக்க ஆரம்பித்தான்.

''புதுப் புத்தகம் வாங்கித்தா, பென்சில் வேணும்'' என்பதே அவன் கோரிக்கை.

''பழைய புத்தகத்திற்கென்ன?''

''அது கிளிஞ்சுபோச்சு, வாத்தியார் புதுப்புத்தகம் வாங்கிப் போகாட்டால் அடிப்பார். பென்சில் இல்லை என்று நேற்று அடிச்சார்''

பள்ளிக்கூடத்திற்கு செல்லாது நிற்க தனக்குச் சார்பாக வேறு பொய்க்காரங்களைக் கூறி அழத்தொடங்கினன்.

''இவன் போடும் சத்தத்தால் நானே படிக்க முடியவில்லை''

உயர் வகுப்பில் படிக்கும் இரத்தினத்தின் மூத்த மகள் மல்லிகா இரசாயனப் பெயர்களை மனனம் செய்வது தடைப்படுவதற்காக சத்த மிட்டாள்.

''இரவிரவாய் படிச்சாய் இப்ப பள்ளிக்குப் போகும் போதும் படிக்கவேணுமா?'' —தந்தை இரத்தினம் அலுவலகத்திற்கு புறப் பட்டபடியே கூறினர்.

''காலையில் படிப்பதுதான் நினைவில் நிற்குமென்று மிஸ் அடிக் கடி சொல்லுவா''

''நீயும் உன் படிப்பும். நித்திரை விளிச்சு உன் கண்ணெல்லாம் வீங்கிப் போச்சு''

''அப்பா, டியூசன் பீஸ் கட்ட ஐம்பது ரூபா தா அப்பா''

''கொம்மாவிட்டைக் கேள்''

''அம்மாவிட்டை புத்தகம் வாங்க பத்து ரூபா கேட்டன் இல்லை. என்று அடிக்க வாரு. அப்பா நீங்க குடுங்க''

இரத்தினத்தின் மற்றப் பையன் அசோகன் இடையே வந்து கேட்டான்.

''அக்காவிற்கே கொடுக்க இல்லை. இப்ப உனக்குத்தான் காசு தரக்கிடக்கு'' —சீறி விழுந்தார்.

''புத்தகமில்லாமல் கிளாசுக்கு வரவேண்டாம் என்று வாத்தி யார் சொல்லிவிட்டாரப்பா. நானும் பள்ளிக்குப் போகாமல் நிக்கப் போகிறேன்''

''இன்றைக்குப் போ. நாளைக்குப் பார்ப்பம்''

''புத்தகமில்லாது பாடம் படிக்காததால் அவன் கழுதையே, எருமையே என்று பேசிருரப்பா'' ஆத்திரத்தோடு அசோகன் கூறி னன்.

''என்ன செய்யிறது. இப்படிப் பேச்சு வாங்கிப் படித்தபடியால் தான் நான் இன்று கந்தோரிலே வேலை பார்க்க முடிந்தது''

''அறிவுக்காகத் தான் கல்வி, வேலைபார்க்க இல்லை என்று அவர் சொல்லுகிருர்''

''அது பொய், அறிவுக்குக் கல்வியென்ருல் வீட்டிலேயே படித்து விடலாம். அட்வான்ஸ் லெவல் அல்லது பி. ஏ. பாஸ் பண்ணினது என்று ஒரு சேர்ட்டிபிக்கெட் நீ பெறவேணுமடா. அதன் பின் தான் வேலைக்கு முயலலாம். பரீட்சைதான் முக்கியம்''

''பரீட்சை முடிந்ததும் இந்தப் புத்தகம் நோட்ஸ் எல்லாவற் றையும் நான் எரிக்கப்போகிறேனப்பா'' மல்லிகா இடையில் கூறி னள்.

''இரண்டாந்தரமும் பரீட்சை எழுதவேண்டிவரும். அவசரப் பட்டு எரிக்காதையக்கா'' அசோகன் நளினமாகக் கூறினன்:

''உனக்கு வேணுமென்றால் எடுத்து வைச்சுக்கொள்''

''இவ்வளவு புத்தகம் நோட்ஸை என்னால் பாடமாக்கி பரீட்சை எழுத முடியாது. நான் எங்காவது ஓடிவிடுவேன்'' அசோகன் அக்காவிற்கு பதில் கூறினான்.

''நீ ஆண்பிள்ளை, இதிலும் பார்க்கக்கூடபடிக்க வேணும்''—இரத்தினம் கூற அசோகன் பதில் சொன்னான்:

''நீங்கதானே ஓடிவிளையாடித்திரிகிற வயசு என்று அடிக்கடி சொல்லுவீங்க. பிறகு 20 மணிநேரமும் அக்காபோலை படிக்க வேணும் என்றும் சொல்லுவீங்களோ. அது மட்டும் என்னால் முடியாது''

மீண்டும் இந்திரனின் வீறிட்டழும் சத்தம் கேட்டது.

''அம்மா அடிக்காதை, அப்பா, அப்பா'' என்ற குரல்.

பாடசாலைக்கு போகமாட்டேன் என்று அடம் பிடித்த இந்திரனுக்கு தாய் புளியங் கம்பால் அடித்து அறையிலிருந்து வெளியேற்றிக் கொண்டிருந்தாள்.

மொன்ரிசூரி பாலர் பாடசாலைக்கு சிணுங்கலோடு புறப்பட்டுக் கொண்டிருந்த நாலு வயதான புனிதம் என்ற கடைசிப் பெண் இக்காட்சியைக் கண்டு, சிணுக்கத்தை விட்டு ஒதுங்கி முளி பிதுங்க நின்றாள். அண்ணனுக்காக பரிதாபமும் தங்கைக்காக அச்சமும் அவள் முகத்தில் பிரதிபலித்தது.

பிள்ளைகள் மாலையில் கால் முகம் கழுவி படத்தின் முன் கை கூப்பி, கடவுளைத் தொழுது நெற்றியில் திருநீறு பூச வேண்டும் என்பது இரத்தினத்தின் கோட்பாடு. ஆயினும் அவர் மனைவி அமிர்தம் பிள்ளைகள் அதைத் தவற விடினும் புத்தகமெடுத்து தூங்கி விழும் வரை படிக்க வேண்டும் என்பதிலேயே கருத்தாயிருந்தாள். பிள்ளைகளின் கல்வி மூலம் தான் அவர்களுக்கும். தமக்கும் முதுமையில் விடிவு ஏற்படும் என்பது அவள் கருத்து: வழிபாடு. இதற்காக அவள் தன் சீதனப் பணம், நகைகள் யாவையுமே இழந்து விட்டாள். தாலியைக்கூட. கொடியை விற்று விட்டு. சங்கிலியில் கோர்த்து போடத் தொடங்கினாள். தன் சாப்பாட்டை சுருக்கி, ஆடம்பரம் யாவையும் நிறுத்தி விட்டாள். இந்நிலையில் பிள்ளைகள் பள்ளிக்குச் செல்வதைக் கடத்த அடம் பிடிப்பதை அவளால் தாங்க முடியவில்லை. புளியங்கம்பு ஒன்றை அடுப்படி கூரையில் செருக்கி வைத்திருந்தாள்.

அத்தனை அடி வாங்கியும் இந்திரன் பாடசாலைக்குப் போக முடியாது என்று அடம் பிடித்துக் கொண்டிருந்தான். இரத்தினம் பின்னர் மல்லிகாவிடமிருந்து ஒரு பென்சிலை வாங்கி வந்து அவனிடம் கொடுத்து மனைவியிடமிருந்து கம்பைப் பறித்து வீசி விட்டு, அவனை அணைத்து ஆறுதல் கூறினார், அதன் பின்னரே அவன் ஓரளவு ஆறுதலடைந்து பாடசாலைக்குப் புறப்பட தயாரானான்.

தன் பென்சிலை இழந்த மல்லிகா இந்திரனைப் பார்த்து அதட்டினாள்:

'நேற்று வைத்திருந்த உன் பென்சில் எங்கே?''

''தொலைந்து போச்சு''

''பொய். உண்மை சொல்லு'' செவியை திருகியபடி கேட்டாள். அவன் 'ஆ, ஊ' என்று திமிறினான்.

''ஒரு பிள்ளை திருடிப் போட்டுது.''

'பொய், உண்மை சொல்லு' செவியை மீண்டும் திருகியபடி அதட்டினாள்.

''ஒரு பிள்ளைக்குக் குடுத்தேன்''

''ஏன் குடுத்தாய்?''

'அது ஏழைப் பிள்ளை'

''அதுக்காக''

''ஏழைகளுக்காக உதவ வேண்டும் என்று டீச்சர் அடிக்கடி சொல்லுவார்'

''இனிமேல் இப்படிக் கொடுத்திட்டு வா. உன் செவியை திருகி எடுப்பேன்'' —மல்லிகா பல்லைக் கடித்துக் கொண்டே கூறினாள்.

'ஈவது விலக்கேல் என்று ஆத்திசூடியில் நீ படிக்கேல்லையா? புத்தகத்தைக் காட்டடட்டா''

இந்திரன் தன் புத்தகப் பெட்டியைத் திறந்தான்.

அசோகன் மீண்டும் வந்து தாயிடம் முறைப்பாடு வைத்தான். ''அம்மா, புத்தகம் வாங்க அப்பாவும் காசு இல்லையென்று விட்டார். சேட் ஒரே அழுக்காயிருக்கம்மா, நீ வாங்கித் தந்த பாட்டா டென்னிஸ் சூஸ் கிளிஞ்சு போச்சு. இன்றைக்கு நான் பள்ளிக்குப் போக முடியாது''

''இன்றைக்கு மட்டும் போ. நாளைக்கு வாங்கித் தருகிறேன்''

''ஒவ்வொரு நாளும் இப்படித்தானே நீ பொய் சொல்லுறாய். நாங்கமட்டும் பொய் சொல்லப்படாது, சொன்னால் அடிக்கிறாய்''

''நாளைக்குக் கட்டாயம் கடன் பட்டென்றாலும் வாங்கித் தாறனே?'.

''உன் பேச்சுக்காக இன்றைக்கு மட்டும் போய் டீச்சரிடம் அடி வாங்கி வாறன், நாளைக்கு ஏமாத்து, நடக்கிறதைப் பார்''

''என்னடா அப்படிச் செய்து விடுவாய் நாளைக்கு''

''வீட்டை விட்டே ஓடி விடுவேன்''

''அது நாளைக்குத் தானே. இன்றைக்குப் போய் விட்டு வா''

**KUMARAN 55**—201, DAM STREET, COLOMBO-12.
Registered as a Newspaper in Sri Lanka.

வெளிவந்துவிட்டன !

சங்கர ஐயர் எழுதிய

**புதிய உயர்தர விலங்கியல் - பகுதி I ரூ. 12.00**

**,, ,, ,, பகுதி II (அச்சில்)**

**'தமிழவேள்' எழுதிய காரைக்காலம்மையார் ரூ.7.00**

தயாளன் தயாரித்த

**கணிதம் 1 ரூ. 3.00**

**கணிதம் ரூ. 3.75**

**விஞ்ஞானம் ரூ. 5-75**

அரசின் க. பொ. த. (சாதாரணம்) புதிய மாதிரி வினுத்
தாள்களுக்கு அமைய எழுதப்பட்ட வினுக்களும்
விளக்கமான விடைகளுடனும் கூடியது.

தமிழவேள் எழுதிய

**புதிய சைவசமய பாடம் 8 - ரூ. 3.75**

**சைவசமயம் க. பொ. த. - ரூ. 8.00**

**தமிழ்ப் பயிற்சி க. பொ. த. - ரூ. 5.00**

'தமிழவேள்' எழுதிய

**கம்பராமாயணம் (காட்சி, நிந்தனை படலம்—அச்சில்)**

மற்றும் தமிழ், ஆங்கில சிங்கள நூல்கள் யாவும் கிடைக்கும்.
வி. பி. பி. கவனிக்கப்படும்.
வியாபாரிகளுக்கு கழிவு உண்டு.

# விஜயலட்சுமி புத்தகசாலை,

248, காலி வீதி : : வெள்ளவத்தை,
கொழும்பு-6.

தொலைபேசி : 88930

இப்பத்திரிகை கொழும்பு-12, 201, டாம் வீதியில் வசிக்கும் செ. கணேசலிங்கன் அவர்களால். அதே முகவரியிலுள்ள புதிய குமரன் அச்சகத்தில் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.
திருவாக ஆசிரியர் : செ. கணேசலிங்கன்.